# முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 385/2023

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயலட்சுமி | தொழில் | |
| க/பெ | பாலதண்டாயுதம் | வயது | |
| ஊர் | | தேதி | 26.06.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (26.06.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர்மேல்பாதி . எனது கணவரின் ஊரும் மேல்பாதிதான் . நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை கையெழுத்து மட்டும் போடுவேன் . வழக்கு விவரங்கள் எனக்குதெரியுமா என்றால் தெரியும். நான் இந்த வழக்கை பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் 21 அயிட்ட சொத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . 21 அயிட்ட சொத்துக்களை 2 அட்டவணை சொத்துக்களாக குறிப்பிட்டுள்ளேன் ஏனென்றால் சொத்துக்கள் மேல்பாதி மற்றும் மாதிரிமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ளது . எ அட்டவணை சொத்தில் 2 இன சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது . அதன் சர்வே எண் மற்றும் விஸ்திரணம் எனக்கு தெரியாது . பி அட்டவணை சொத்தும் 2 இன சொத்துக்கள் அதன் சர்வே எண் எனக்கு தெரியாது , விஸ்திரணம் ஒன்று 15 செண்ட் மற்றொன்று 21 செண்ட். வழக்கு சொத்து யாருக்குசொந்தமானது என்றால் பாலதண்டாயுதம் மற்றும் தண்டபாணி ஆகியோருக்கு சொந்தமானது . பாலதண்டாயுதம் என்பவர் எனது கணவர் , தண்டபாணி என்பவர் எனது மூத்தார். எப்படி சொத்துக்கள் இருவருக்கும் பாத்தியமானது என்றால் எனது மாமானரின் சொத்து . எனது மாமனார் பெயர் ஆறுமுகம் . ஆறுமுகம் என்பவர் இறந்துவிட்டார். ஆறுமுகம் என்பவரது மனைவியின் பெயர் இந்திராணி அம்மாள் , அவரும் இறந்துவிட்டார். ஆறுமுகம் மற்றும் இந்திராணி ஆகியோருக்கு வாரிசு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டனர் . ஆறுமுகம் மற்றும் இந்திராணிக்கு மூன்று மகள்கள் இரண்டு ஆண்மகன்கள் அதில் ஒரு மகள் இறந்துவிட்டார். அவரது வாரிசு தமிழ்செல்வி ,ஜெயகொடி, பாலதண்டாயுதம், தண்டபாணி. தமிழ்செல்வி ,ஜெயகொடி ஆகியோரை எனது வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால்

சரி. அவர்கள் இருவரும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பதாலும் அவர்களை சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரிதான் . பி அட்டவணை முதல் 2 இன சொத்துக்களை இந்திராணி அம்மாள் எனது மூத்தார் தண்டபாணி சேர்ந்து இந்த வ ழக்கில் 3 முதல் 6 வரையான பிரதிவாதிகளின் தகப்பனரான ஏழுமலை என்பவருக்கு விற்பனை செய்துவிட்டனர் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. இரண்டு வருடத்திற்கு முன்பு தான் மேற்படி விவரம் எனக்கு தெரிய வந்தது . 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரி . 1980 ம் வருடம் முதல் ஏழுமலை என்பவரது தான் சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்று தடுத்தேன் . 1980 ம் வருடமே வருவாய்த்துறையினரால் பட்டாவானது ஏழுமலை என்பவரது பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்குதெரியாது . அந்தஇடத்திற்கு வீட்டு வரியை பிரதிவாதிகள் தான் செலுத்திவருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது . 1980 ம் வருடம் பிரதிவாதிகள் எந்தவிதஇடையூறு இன்றி சொத்தினை அனுபவித்து வருவதால் எதிரிடை பாத்தியம் வழக்கு சொத்தில் உள்ளதா என்றால் இல்லை . நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன் . எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் இரண்டு வருடத்திற்கு அனுப்பினேன் . இரண்டு வருடத்திற்கு முன்பு தான் பிரதிவாதிககள் அனுபவித்து வருவது எனக்கு தெரியும் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் இல்லை . வழக்கில் பி அட்டவணையில் உள்ள 1 மற்றும் 2 இன சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே வருவாய்த்துறையினரால் பட்டா எண் . 56 என்ற எண்ணில் 3 முதல் 6 பிரதிவாதிகள் தகப்பனார் ஏழுமலை என்பவரது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . ஏழுமலை என்பவர் இறந்த பிறகு 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் அவர்களது பெயரில் பட்டா மாற்றம் செய்துக்கொண்டனர் என்றால் அது எனக்கு தெரியாது . பட்டா எண். 14, 74 3 ம் பிரதிவாதிகள் பெயரிலும் , பட்டா எண். 1432 4 ம் பிரதிவாதியின் பெயரிலும் , பட்டா எண். 1475 4 ம் பிரதிவாதியின் பெயரிலும், பட்டா எண்.1413 5 ம் பிரதிவாதியின் பெயரிலும், பட்டா எண். 1434 6 ம் பிரதிவாதியின் பெயரிலும் , பட்டா மாற்றம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல . பி அட்டவணை சொத்தின் 2 வது இன சொத்தின் விஸ்திரணம் 22 1/2 செண்ட் என்று சொல்லியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரி . 15 மற்றும் 21 செண்ட் விஸ்திரணம் உள்ளது . 2 வது இன சொத்தின் மொத்த விஸ்திரணம் 30 செண்ட் என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தகப்பனார் ஏழுமலை என்பவர் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் செல்லாது என்று கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 3

ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னால்எனது கணவர் இறந்த பின் தான் எனக்கு தெரியாது . 3 வருட காலத்திற்குள் வழக்குக தாக்கல் செய்யாத காரணத்தினால் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவரை எந்த வருடம் திருமணம் செய்துகொண்டேன் என்றால் அது நியாபகமில்லை 30 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்துகொண்டேன் எனக்கு இரண்டு மகள், இரண்டு மகன். பி அட்டவணையில் உள்ள 1 மற்றும் 2 இன சொத்துக்களை 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் அவர்களுக்குள் 03.07.2013 ம் தேதி பாகம் பிரித்துக்கொண்டனர் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது . பாக அட்டவணை படி சொத்தினை பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது எனக்குதெரியாது . நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் . 2 வருடத்திற்கு முன்பு புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில் லை என்றால் அது என் வீட்டில் உள்ளது. நான் வளவனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். யார் யார் பெயரில் புகார் கொடுத்தேன் என்றால் இளமுருகன் வடிவேல், ஐயனார், அண்ணாதுரைஆகியோர் பெயரில் புகார் அளித்தேன் . நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் உண்மையில் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தால் அதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல . 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் 2013 ம் வருடம் பாகம் பிரித்துக்கொண்டு ஆண்டு அனுபவித்து வருகின்றனர் எனவே அந்த பாக பிரிவினை செல்லாது என்றால் பாக பிரிவினை ஏற்பட்ட 3 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் பாக பிரித்துக்கொண்டது எனக்கு தெரியாது . இரண்டு வருடத்திற்கு முன்பு என்ன தேதி என்று எனக்கு தெரியாது . 1980 ம் வருடம் பிரதிவாதிகளின் கிரையம் பெற்ற போது எனக்கு திருமணம் நடைபெறவில்லை என்றால் சரி . அதனால் கிரையத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரி . எனது கணவர் கையொப்பம் செய்யவில்லை. எனது கணவர் 2012 ம் வருடம் இறந்துவிட்டார் . எனது கணவர் இறக்கும்போது அவருக்கு என்ன வயது என்றால் அது எனக்கு தெரியாது . எனது கணவர் உரிமை வயது அடைந்தவுடன் 3 வருட காலத்திற்குள் கிரையம் செல்லத்தக்கது அல்ல என்று வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல . வா.சா.ஆ 1 அசல் எங்குள்ளது என்றால் அது எனது மூத்தார் வைத்திருப்பார் . அந்த கிரைய ஆவணத்தின் அசலை பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்ததால் அவரிடம் ஒப்படைத்துவிட்டனர் என்று சொன்னால் இல்லை . யார்யார்கிடைய பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றால் 07.02.1969 ம் வருடம் தண்டபாணி மற்றும் பாலதண்டாயுதம்

ஆகியோருக்கிடையே ஏற்பட்டது . வா.சா ஆ 3 முதல் 5 வரையிலான ஆவணங்கள் இந்திராணி அம்மாள் , தண்டாயுதம் ஆகியோரால் எழுதிகொடுக்கப்பட்டது என்றால் சரி . அதில் எனது கணவர் கையொப்பம் செய்யவில்லை . வா.சா. ஆ 8 தண்டபாணி மற்றும் பாலதண்டாயுதம் ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்ட பத்திரம் . எந்த தேதியில் பிரித்துக்கொண்டனர் என்றா் லஎனக்கு தெரியாது . எந்த எந்த சொத்துக்கள் என்பது பற்றியும் எனக்கு தெரியாது . வா.சா.ஆ 6 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரி . பதிவு செய்யப்படாத ஆவணத்திற்கு நீதிமன்ற முத்திரை கட்டண செலுத்தவேண்டும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது . எவ்வளவு பத்திரத்தில் எழுதப்பட்டது என்பதும் எனக்குதெரியாது. பாக அட்டவணை பத்திரத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குதெரியாது என்றால் எனது அப்பா சாட்சி கையொப்பம் செய்துள்ளாம் எனது கணவரும் , மூத்தாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் . 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தினை மோசடி செய்யும் பொருட்டு என்னால் தற்போது ஏற்படுத்தப்பட்ட பொய்யான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல . இந்த ஆவணத்தை தயார் செய்ததற்கு எனது அப்பா உடைந்தை யாக இருந்ததால் அவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல . ஆறுமுகம்கவுண்டர் , மனைவி மற்றும் 2 பெண்கள் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரி . அவர்களுக்கும் சொத்தை பாகம் உள்ளது என்றால் அவர்களை மோசடி செய்ய வேண்டும் என்பதால் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல . ஆறுமுகம் என்பவருக்கு தங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரி . 18.01.2001ம் தேதி தண்டபாணி என்பவர் விழுப்புரம் சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் கொடுத்த மனுபற்றி எனக்கு தெரியாது என்றால் சரி . அந்த மனுவின் பேரில் என்ன விசாரணை செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி . வா.சா.ஆ 13 3 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு உரியது இல்லை என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள வாய்தா ரசீது எந்த சொத்துக்குரியது என்றால் மாதிரிமங்கலம் சொத்துக்கு தாக்கல் செய்துள்ளேன் . பிரிதிவாதி யின் தகப்பனார் கிரையம் பெற்ற மேல்பாதி கிராமத்திற்குள்ள சொத்திற்கு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரி . வா.சா.ஆ 16 கணினி சிட்டாவானது இந்திராணி பெயரில் உள்ளது என்றால் சரி . பட்டா எண். 73 என்பது ராமச்சந்திரன் என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரி . பட்டா எண். 1021 இந்திராணி மற்றும் லட்சுமி பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரி . பட்டா எண். 151 விட்டல் நாதன் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரி . பட்டா எண். 1101 ஏ.கே.ஆர் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட் இணை நிர்வாக இயக்குநர் ரவிக்குமார் தந்தை அருண்குமார் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல வா .சா.ஆ 16 பொய்யான ஆவணம் என்றால் சரி . பட்டாவில்

உள்ள நபர்களை நான் இந்த வழக்கின் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றால் அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்பது எனக்கு தெரியாது . அவர்களை அவசிய தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல . எனது கணவர் பாலதண்டாயுதம் என்பவர் 27.08.2012 ம் தேதியில் இறந்தார் எ ன்று சொன்னால் சரி. அவருடைய வாரிசு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளேன். 10.01.2000 வருடம் தான் எனது மாமியார் இந்திராணி என்பவர் இறந்தார் என்றால் சரி. நான் அவசிய தரப்பினர்ககை சேர்க்காத காரணத்தினால் நான்தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல . பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)

I Additional Subordinate Judge,
Villupuram